# முதன் முதலில்  சந்தித்தேன்

காரை செ. சுந்தரம்பிள்ளை

அந்தக் காலத்தில் மாணவ னாகவே
ஆய்ந்து செந்தமிழ் கற்கும் பொழுதிலே
சிந்தையிற் கவியாக்கிடும் ஆவலும்
செந்தமிட் கவி — வாணரைக் காண்பதும்
எந்த னுட் கிடை தன்னை யுரைத்தவர்
என்ன சொல்கிறார் என்றெதிர் பார்ப்பதும்
சந்தமார் பாடல் கண்ட பொழுதிலே
தன்னையே மறந் தாழ்ந்து சுவைப்பதும்,

அந்த நற்கவி தன்னைப் புகழ்வதும்
ஆக்கியோன் தனைக் காணத் துடிப்பதும்
சந்தமோடு பொருளிலை யா மெனில்
தாக்கிப் பேசுவதிற் சுகம் காண்பதும்
எந்த னுக்கோர் பயித்திய மாகவே
இங்கிருந்திடு நாளையில் ஓர் தினம்
விந்தை யான கவிதைத் தொகுதியை
விற்பனைக் கடைதன்னிலே வாங்கினேன்.

கவிதைக் கன்னியெனு மந்த நூலிலே
கற்பனைத் திறம் கொண்ட கவிஞனின்
நவயுகக் கவியாக வெழில் மிகும்
நல்லதோர் கவி என்னைக் கவர்ந்தது.
கவலை யற்ற கிராமப் புறத்திளம்
கன்னி மார் நகர் சென்று புதுமையில்
அவதி யுற்றிடு தன்மையை ஆழமாய்
அந்தப் பாடலில் காண முடிந்தது.

பட்டினத் தொரு மச்சினி யாமெனும்
பாடலைப் பல நாட்கள் படித்து நான்
கெட்டிக் காரன்தான் இந்தக் கவிஞனும்

கிஞ்சித் தேனும் சந்தேகமே யில்லைக் காண்
இட்ட மான பொருளை இலகுவாய்
யாவரும் படித்தின்புறும் வண்ணமே
திட்பமாக வரைந்துள்ளான் என்றுமே
சிநேகிதர்க் கெலாம் சொல்லி மகிழ்ந்தனன்.

நாட்கள் ஓடியே மாதங்க ளாயின
நாலிரண்டு வருடமு மோடின
பாட்டிலே அன்று பார்த்த கவிஞனைப்
பட்டினத் தொரு மச்சினிக் காரனை
ஈட்டரும் புகழ் கொண்ட புலவனை
யானுமோ ஒரு நாளுமே கண்டிலன்
தீட்டு மன்னவர் பாடலை நான் பல
செய்தித் தாழ்களில் பார்த்து மகிழ்ந்தனன்.

இந்த வாறு இருந்திடு நாளையில்
யாழ். இலக்கிய வட்டச் செயலராம்
சந்தம் மிக்க தமிழிற் சிறுகதை
தாமெழுதிடும் சண்முக நாதனுர்
எந்தன் வீட்டை யடைந்தொரு நூலுக்கு
யானோர் ஆய்வுரை செய்திட வேண்டுமென்
றுந்தினுர் அந்த நூலைப் படைத்தவர்
உள்ளமே கவர் தில்லைச் சிவன் என்ருர்.

'தாய்' எனும் அந்த நல்ல கவிதை நூல்
தன்னைத் தந்தவர் செல்லும் பொழுதிலே
வாயினித்திடும் நல்லதோர் ஆய்வுரை
வந்திருப்பவர் மெச்சும் வகையிலே
போயளித்திட வேண்டு மென் னுள்ளத்தில்
போட்டுக் கொண்டனன்; ஏனெனில் அன்னவன்
தூய செந்தமிட் பாடல்களால் எனைச்
சொக்க வைத்த நற் பாவலன் அல்லவோ.

தாயெனும் அந்த நூலை வெளியிட்ட
சந்தர்ப்பத்திற் கவிஞனைக் கண்டனன்
தூய வெண்ணிற ஆடை யணிந் திரு
தோளிலும் பட்டுச் சால்வை தரித்துமே
ஆய நற்றமிழ்ப் பாவலருக் குள்ள
ஆளுமையுடன் காட்சி கொடுத்தனன்
நேயமான தோர் கூரிய பார்வையும்
நேர்த்தியான தோர் பேச்சையும் பார்த்தனன்.

தற்பெருமை சிறிது மிலாதவர்
தன்னைப் போலப் பிறரையும் எண்ணிடும்
நற்குணப் பண்பு வாய்ந்திடப் பெற்றவர்
நற்றமிழ்ப் பண்பில் ஊறித் திளைத்தவர்
கற்பனைப் பஞ்ச மற்றதோர் பாவலர்
கவிஞரை நன்கு நேசிக்கும் நெஞ்சினர்
தற்பொழுதுள்ள நல்ல கவிஞருள்
தலைமை யானவர்; தகுதியும் உள்ளவர்.